நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, மயிலாடுதுறை
முன்னிலை : திரு. M. ராஜேஷ்கண்ணா M.A., LL.M.,
நீதித்துறை நடுவர் எண்.2
மயிலாடுதுறை.
2056 திருவள்ளுவராண்டு விசுவாவசு வருடம் மாசி திங்கள் 23 ஆம் நாள்
2026 ம் வருடம் மார்ச் மாதம் 07–ம் நாள் சனிக்கிழமை

**C.N.R.No.TNMY- 000287-2024**
**ஆண்டுபட்டிகை வழக்கு எண் – 19/2024**

அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர்,
மயிலாடுதுறை இருப்புபாதை காவல் நிலையம்,
குற்ற எண். 37/2023,
சட்டப்பிரிவுகள் 294(b), 506 (ii) இதச .....குற்ற முறையிடுபவர்

//எதிராக//

ராஜசேகரன், வயது– 34/2023,
த/பெ. சுப்ரமணியன்,
39–A கஸ்தூரிபாய் தெரு,
கூறைநாடு,
மயிலாடுதுறை தாலுக்கா. .....எதிரி

******

**மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் 07.04.2021 தேதியிட்ட R.O.C. No.814 /2020/ RG/F1 ன் படி வழக்கின் சுருக்கம் மற்றும் Rule 106 Cr.R.P. ன்படி**

**CASE SUMMARY**

| | | | | |
|---|---|---|---|---|
| i) | The period of Remand of the Accused | Date of Arrest | Date of Surrender | Released on Bail |
| | | Anticibatory bail | 02.11.2023 | 02.11.2023 |
| ii) | Date of filing of the Complaint/Final report in the Court | Filing of complaint | Filing of Final Report | |
| | | 08.10.2023 | 18.01.2024 | |
| iii) | The date of questioning of the Accused U/s.240 of the code of Criminal Procedure 1973 | 06.05.2024 | | |

| iv | Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior courts except petitions U/s.317 of crpc. | Crlmp No. | Date of filing | Result |
|---|---|---|---|---|
| | | U/s.359 of BNSS CrlMP.No.277/2026 | 09.02.2026 | Dismissed on 09.02.2026 |
| v) | Date of examination in-chief and cross-examination of a witness | Name of the witness | Date of Chief | Date of Cross |
| | | PW1 | 09.02.2026 | 09.02.2026 |
| | | PW2 | 09.02.2026 | 09.02.2026 |
| | | PW3 | 09.02.2026 | 09.02.2026 |
| | | PW4 | 09.02.2026 | 09.02.2026 |
| | | PW5 | 09.02.2026 | 09.02.2026 |
| | | PW6 | 16.02.2026 | 16.02.2026 |
| | | PW7 | 23.02.2026 | 23.02.2026 |
| vi) | Date of examination of the Accused U/s.313(1)(b) Cr.P.C. | 03.03.2026 | | |
| vii) | Details of abscondence of an Accused and his appearance/production, as the case may be; and | Nil | | |
| viii) | Grant of stay by superior court and the results there of | Nil | | |

******

இவ்வழக்கு 18.01.2024 தேதி அன்று இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு, பரிசீலனையில் இருந்து வந்து 03.03.2026 அன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்து குற்றமுறையிடுபவர் தரப்பில் கற்றறிந்த மயிலாடுதுறை அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–2 திருமதி. G. சிவகாமி அவர்களும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. B. முருகவேலு அவர்களும் முன்னிலையாகி இருதரப்பு வாதங்களையும் கேட்டு வழக்காவணங்களை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

இவ்வழக்கானது மயிலாடுதுறை இருப்புபாதை காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் எதிரிக்கு எதிராக இந்திய தண்டனை சட்டம் 294(b), 506 (ii) ஆகிய பிரிவுகளின் கீழ் 37/2023 என்ற குற்ற எண்ணில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதியறிக்கையின் பேரில் தொடரப்பட்டதாகும்.

**(i) அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :–**

கடந்த 08.10.2023ம் தேதி காலை 5.45 மணிக்கு வைத்தீஸ்வரன் கோவில் ரயில் நிலையத்தில் புகார்தாரர் சஞ்சய்குமார்மீனா நிலைய அதிகாரியாக பணியில் இருந்த போது அதே ரயில் நிலையத்தில் பாயிண்ட்ஸ்மேனாக பணிபுரிந்து வரும் எதிரி ராஜசேகரன் முதல் நாளான 07.10.2022 அன்று ஓய்வில் இருந்த நிலையில் 08.10.2023 அன்று பணிக்கு வரவேண்டியவர் மீண்டும் லீவு கேட்டு புகார்தாரர் சஞ்சய்குமார்மீனாவிடம் தகராறு செய்து தகாத வார்த்தைகளில் திட்டி மேஜையில் இருந்த டார்ச் லைட்டை எடுத்து புகார்தாரரை தாக்கி ஸ்டோர் ரூமில் இருந்த அரிவாளை எடுத்து கொலைமிரட்டல் விடுத்ததாக எதிரிக்கு எதிராக இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதியறிக்கை, ஆவணங்கள் அனைத்தும் பரிசீலனை செய்யப்பட்டு எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டிற்கு முகாந்திரம் இருப்பதால் இவ்வழக்கானது கோப்பிற்கு எடுக்கப்பட்டது. பின்னர் எதிரி இந்நீதிமன்றத்தில் அழைப்பாணையின் பேரில் முன்னிலையானவுடன் அவர்களுக்கு அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்காவணங்களின் நகல்கள் யாவும் பிரிவு 207 குவிமுச படி இலவசமாக வழங்கப்பட்டது. படித்து பார்க்க போதுமான கால அவகாசம் வழங்கப்பட்டது.

3) பின்னர், எதிரி மீது சட்டப்பிரிவுகள் 294(b), 352, 506(2) இ.த.சவின் கீழான குற்றம் பற்றி வினவிய போதும் எதிரிக்கு எதிராக இதச பிரிவுகள் 294(b), 352, 506(2)–ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து படித்துக்காட்டி, விளக்கிக் கூறி வினவியபோது எதிரி அவர் மீதான குற்றத்தை மறுத்து குற்றவாளி இல்லை என்றும், எதிர்த்து விசாரணை நடத்திடவும் வேண்டினார். எனவே, அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு, சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

4) இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.7 வரையிலானவர்கள் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளனர். **அ.சா.ஆ.1** முதல் **அ.சா.ஆ.11** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. **அ.சா.பொ. 1, 2 சான்று** பொருள்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் பட்டியல் சாட்சிகளாக 9 நபர்கள் குறிப்பிடப்பட்ட நிலையில், பட்டியல் சாட்சி–7 மற்றும் பட்டியல் சாட்சி–8 ஆகியோர் முன்னிலைப்படுத்தப்படாமல் வழக்கின் தன்மை கருதி அரசு தரப்பில் நீக்கரவு (Dispense) செய்யப்பட்டுள்ளனர்.

**(ii) அரசு தரப்பு சாட்சிகளின் , சாட்சியங்களின் சுருக்கம்**

5) இவ்வழக்கின் புகார்தாரரான **அ.சா.1** சஞ்சய்குமார்மீனா தனது சாட்சியத்தில், தான் மயிலாடுதுறை ரயில்வே ஸ்டேசனில் ஸ்டேசன் மாஸ்டராக பணிபுரிந்து வருவதாகவும், தேதி, மாதம் நினைவில் இல்லை, ஒரு நாள் தான் வைத்தீஸ்வரன் ரயில் நிலையத்தில் ஸ்டேசன் சூப்பரண்டாக வேலை செய்த போது அடையாளம் தெரியாத ஒரு நபர் தன்னிடம் தகராறு செய்ததாகவும், அந்த சமயம் ரயில் நிலையத்தில் ஆட்கள் நிறைய வந்து சென்று கொண்டிருந்ததாகவும், எதிரி ராஜசேகரன் என்பவர்தான் தன்னிடம் தகராறு செய்ததாக நினைத்து போலீசாரிடம் புகார் மனு கொடுத்துவிட்டதாகவும், சம்பவ சமயத்தில் எதிரி ராஜசேகரன் சம்பவ இடத்தில் இல்லை என்றும், தற்பொழுது நீதிமன்றத்தில் தன்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் **அ.சா.ஆ.1** தன்னுடையதுதான் என்றும், பின்னிட்டு போலிசார் தன்னை

விசாரிக்கவில்லை என்றும், அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு நீதிமன்றத்தால் அனுமதியளிக்கப்பட்டு சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

6) மற்றொரு சாட்சியான **அ.சா.2** தனது சாட்சியத்தில், தான் மயிலாடுதுறை ரயில்வே நிலையத்தில் போக்குவரத்து ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 2021-ம் ஆண்டு முதல் 2024-ம் வரை ஆனந்ததாண்டவபுரம் முதல் புதுசத்திரம் மற்றும் நன்னிலம், பேரளம் ஆகிய ரயில் நிறுத்தங்களுக்கு போக்குவரத்து ஆய்வாளராக பணிபுரிந்து வந்ததாகவும், தேதி, மாதம் நினைவில் இல்லை, ஒரு நாள் அ.சா.1 வைத்தீஸ்வரன் ரயில் நிலையத்தில் ஸ்டேசன் சூப்பரண்டாக வேலை செய்த போது அடையாளம் தெரியாத ஒரு நபர் அவரிடம் தகராறு செய்ததாக தன்னிடம் அலைபேசியில் தெரிவித்ததாகவும், தான் உடனே தகராறு செய்த நபர் மீது காவல்நிலையத்தில் புகார் கொடுக்குமாறு அ.சா.1 னிடம் கூறியதாகவும், பின்னிட்டு போலிசார் தன்னை விசாரித்ததாகவும், அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு நீதிமன்றத்தால் அனுமதியளிக்கப்பட்டு சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

7) கண்ணுற்ற சாட்சியான **அ.சா.3** தனது சாட்சியத்தில், தான் வைத்தீஸ்வரன்கோவில் ரயில்வே நிலையத்தில் பாயிண்ட்ஸ்மேனாக பணிபுரிந்து வருவதாகவும், இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு நீதிமன்றத்தால் அனுமதியளிக்கப்பட்டு சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

8) பார்வை மகசர் சாட்சியான அ.சா. 4 ராகிராஜ் தனது சாட்சியத்தில் தான் தற்போது மயிலாடுதுறை ரயில்வே நிலையத்தில் CCTC ஆக பணிபுரிந்து வருவதாகவும், இந்த வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், கடந்த 08.10.2023–ம் தேதி காலை 5.55 மணியளவில் வைத்தீஸ்வரன் கோவில் ரயில்நிலையத்தில் தான் பணியில் இருந்த போது போலிசார் தன்னிடம் கையொப்பம் பெற்றதாகவும், எதற்காக என்று தனக்கு தெரியாது என்றும், தற்பொழுது நீதிமன்றத்தில் தன்னிடம் காட்டப்படும் பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையொப்பங்கள் முறையே **அ.சா.ஆ.2** மற்றும் **அ.சா.ஆ.3** என்றும், பின்னிட்டு போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு நீதிமன்றத்தால் அனுமதியளிக்கப்பட்டு சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

9) பார்வை மகசர் சாட்சியான **அ.சா.5** மணிமாறன் தனது சாட்சியத்தில் தான் தற்போது வைத்தீஸ்வரன் கோயில் ரயில்வே நிலையத்தில் பாயிண்ட்ஸ்மேனாக பணிபுரிந்து வருவதாகவும், இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றும், கடந்த 08.10.2023–ம் தேதி காலை 5.55 மணியளவில் வைத்தீஸ்வரன் கோவில் ரயில்நிலையத்தில் தான் பணியில் இருந்த போது போலிசார் தன்னிடம் கையொப்பம் பெற்றதாகவும், எதற்காக என்று தனக்கு தெரியாது என்றும், தற்பொழுது நீதிமன்றத்தில் தன்னிடம் காட்டப்படும் பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையொப்பங்கள் முறையே **அ.சா.ஆ 4** மற்றும் **அ.சா.5** என்றும், பின்னிட்டு போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு நீதிமன்றத்தால் அனுமதியளிக்கப்பட்டு சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

10) செவி வழி சாட்சியான **அ.சா.6** மணீஷ்குமார்மிஸ்ரா தனது சாட்சியத்தில்நான் தற்போது வைத்தீஸ்வரன்கோவில் ரயில்வே நிலையத்தில் ஸ்டேசன்மாஸ்டராக பணிபுரிந்து வருவதாகவும், இந்த வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு நீதிமன்றத்தால் அனுமதியளிக்கப்பட்டு சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

11) புலன் விசாரணை அதிகாரியான **அ.சா.7** மனோண்மணி காவல் உதவி ஆய்வாளர் தனது சாட்சியத்தில் தான் தற்போது மயிலாடுதுறை ரயில்வே காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 08.10.2023–ம் தேதி சிறப்பு உதவி ஆய்வாளர் செல்லப்பன் நிலைய அலுவலில் இருந்த போது லஷ்மண்லால்மீனா மகன் சஞ்சய்குமார்மீனா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார்மனு **அ.சா.ஆ.6** பெற்று மயிலாடுதுறை இருப்புபாதை காவல்நிலைய குற்ற எண். 37/2023 இதச பிரிவு 294(b), 506(2) ன் கீழ் முதல் தகவல் அறிக்கையை **அ.சா.ஆ.7** பதிவு செய்ததாகவும், மேல் விசாரணை செய்வதற்காக தன் வசம் ஒப்படைத்த வழக்கு கோப்பை தான் விசாரணைக்கு எடுத்து கொண்டு சம்பவ இடம் சென்று பட்டியல் சாட்சிகள் 1 முதல் 3 வரையிலானவர்களையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாகவும், சம்பவ சாட்சிகள் ராகிராஜ், மணிமாறன் ஆகியோார் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் **அ.சா.ஆ.8** மற்றும் மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.9** தயார் செய்துள்ளதாகவும், பட்டியல் சாட்சிகளை விசாரணை செய்ததில் சம்பவம் உண்மை என தெரிய வந்து எதிரியை தேடி வந்த நிலையில் எதிரி மாண்பமை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றுவிட்டபடியால் எதிரியை கைது செய்ய இயலவில்லை என்றும், மேற்கண்ட சம்பவ சாட்சிகள் முன்னிலையிலேயே குற்ற சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட வழக்கு தடயப்பொருட்களை கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ.10**

தயார் செய்து கைப்பற்றியதாகவும், கைப்பற்றப்பட்ட வழக்கு தடயப்பொருட்களை படிவம் 91 **அ.சா.ஆ.11–**ன் மூலமாக நீதிமன்றத்தில் ஆஜர் செய்ததாகவும், வழக்கு சம்பவத்திற்கான வீடியோ பதிவு அடங்கிய குறுந்தகடு **அ.சா.பொ.1** மற்றும் புகைப்பட எண்ணிக்கை–4 **அ.சா.பொ.2** ஆகியவற்றையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததாகவும், (அ.சா.பொ.1 குறுந்தகட்டிற்கு இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 65(b) சான்றிதழ் தாக்கல் செய்யாத காரணத்தால் குறுந்தகட்டை குறியீடு செய்ய கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கிறிஞர் ஆட்சேபனை செய்தார். மேற்படி ஆட்சேபனைக்கு உட்பட்டு அ.சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டது) பின்னர் எதிரி மீதான விசாரணையை முடித்து கடந்த 07.12.2023 அன்று இதச பிரிவுகள் 294(b), 506(2)–ன் கீழும் ஆகிய சட்டபிரிவுகளின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார்.

12) இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடித்து கொள்ளப்பட்டுள்ளது. இவ்வழக்கின் அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றும் சாட்சிய விவரங்களை தொகுத்து எதிரியிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)–ன் படி வினவியபோது எதிரி பொய்சாட்சியம் என்றும், பொய்வழக்கு என்றும், தனது தரப்பில் சாட்சியம் இல்லை என்றும் கூறி எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது. எதிரி தரப்பில் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

13) அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் தனது வாதத்தில் புகார்தாரரான அ.சா.1 மற்றும் இதர சாட்சிகள் அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலும் முரண்பட்டு சாட்சியம் அளித்தபோதிலும், அ.சா.7 சாட்சியின் மூலமாக புலன் விசாரணையானது வழக்கு சங்கதியுடன் கோர்வையாக இருப்பதாலும், புலன் விசாரணை முறையாக செய்து ஆவணங்கள் மூலமாக எதிரி செய்த குற்றத்தை அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதால் எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்குமாறு வாதிட்டார்.

14) மாறாக எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் இவ்வழக்கின் முக்கிய சாட்சியான புகார்தாரரும், மற்ற அரசு தரப்பு சாட்சிகளும் அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலும் முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதால் அரசு தரப்பு எதிரியின் மீதுள்ள குற்றத்தை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கவில்லை. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி இவ்வழக்கிலிருந்து எதிரியை விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

**(iii) தீர்வுக்குரிய பிரச்சனை**

15) இருதரப்பு ஆவணங்களையும், சாட்சியங்களையும் பரிசீலனை செய்ததில் இவ்வழக்கிற்கு தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட ச/பி 294(b), 352, 506(2) இதசவின் கீழான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**iv) தீர்வு:**

16) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 சஞ்சய்குமார் மீனா சம்பவத்தன்று சம்பவ இடத்தில் வைத்து எதிரி தன்னை திட்டி தாக்கி கொலை மிரட்டல் விடுத்ததாக **அ.சா.ஆ.6** புகார் மனு அளித்த நிலையில் அதற்கு மாறாக தனது சாட்சியத்தில், தான் மயிலாடுதுறை ரயில்வே ஸ்டேசனில் ஸ்டேசன் மாஸ்டராக பணிபுரிந்து வருவதாகவும், தேதி, மாதம் நினைவில் இல்லை, ஒரு நாள் தான் வைத்தீஸ்வரன் ரயில் நிலையத்தில் ஸ்டேசன் சூப்பரண்டாக வேலை செய்த போது அடையாளம் தெரியாத ஒரு நபர் தன்னிடம் தகராறு செய்ததாகவும், அந்த சமயம் ரயில் நிலையத்தில் ஆட்கள் நிறைய வந்து சென்று கொண்டிருந்ததாகவும், எதிரி ராஜசேகரன் என்பவர்தான் தன்னிடம் தகராறு செய்ததாக நினைத்து போலீசாரிடம் புகார் மனு கொடுத்துவிட்டதாகவும், சம்பவ

சமயத்தில் எதிரி ராஜசேகரன் சம்பவ இடத்தில் இல்லை என்றும், தற்பொழுது நீதிமன்றத்தில் தன்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள கையொப்பம் **அ.சா.ஆ.1** தன்னுடையதுதான் என்றும், பின்னிட்டு போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோதும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவான பதில்கள் எதுவும் பெறப்படவில்லை. மேற்படி அ.சா.1–ன் சாட்சியமானது தனது **அ.சா.ஆ.6** புகார் மனுவிற்கு முரண்பட்ட வகையில் அமைந்துள்ளது. எனவே அ.சா.1–ன் புகார் மனு **அ.சா.ஆ.6** இந்நீதிமன்றம் நம்பும் வகையில் ஏற்கக்கூடியதாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

17) செவிவழி சாட்சியான அ.சா.2 தனது சாட்சியத்தில், தான் மயிலாடுதுறை ரயில்வே நிலையத்தில் போக்குவரத்து ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 2021–ம் ஆண்டு முதல் 2024–ம் வரை ஆனந்ததாண்டவபுரம் முதல் புதுசத்திரம் மற்றும் நன்னிலம், பேரளம் ஆகிய ரயில் நிறுத்தங்களுக்கு போக்குவரத்து ஆய்வாளராக பணிபுரிந்து வந்ததாகவும், தேதி, மாதம் நினைவில் இல்லை, ஒரு நாள் அ.சா.1 வைத்தீஸ்வரன் ரயில் நிலையத்தில் ஸ்டேசன் சூப்பரண்டாக வேலை செய்த போது அடையாளம் தெரியாத ஒரு நபர் அவரிடம் தகராறு செய்ததாக தன்னிடம் அலைபேசியில் தெரிவித்ததாகவும், தான் உடனே தகராறு செய்த நபர் மீது காவல்நிலையத்தில் புகார் கொடுக்குமாறு அ.சா.1–னிடம் கூறியதாகவும், பின்னிட்டு போலிசார் தன்னை விசாரித்ததாகவும், அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோதும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவான பதில்கள் எதுவும் பெறப்படவில்லை.

18) கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 ஆரோக்கியமேரி, செவிவழி சாட்சியான அ.சா.6 மணீஷ்குமார்மிஸ்ரா இந்த வழக்கு பற்றி தங்களுக்கு எதுவும் தெரியாது என்றும், அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்ததால் சாட்சிகளை

குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு சாட்சிகள் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோதும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவான பதில்கள் எதுவும் பெறப்படவில்லை.

19) பார்வை மகசர் சாட்சிகளான அ.சா.4, 5 ஆகியோர் தங்களது சாட்சியத்தில் கடந்த 08.10.2023–ம் தேதி காலை 5.55 மணியளவில் வைத்தீஸ்வரன் கோவில் ரயில்நிலையத்தில் தாங்கள் பணியில் இருந்த போது போலிசார் தங்களிடம் கையொப்பம் பெற்றதாகவும், எதற்காக என்று தங்களுக்கு தெரியாது என்றும், அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்ததால் சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு சாட்சிகள் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோதும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவான பதில்கள் எதுவும் பெறப்படவில்லை.

20) புலன் விசாரணை அதிகாரியான அ.சா.7–ன் சாட்சியம், இவ்வழக்கின் புலன் விசாரணை குறித்தும், எதிரிகள் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தது குறித்தும் அமைந்துள்ளது.

21) மேற்படி அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து இவ்வழக்கின் முக்கிய சாட்சியான புகார்தாரரே எதிரிதான் சம்பவத்தில் ஈடுபட்டார் என்று குறிப்பிட்டு சாட்சியமளிக்கவில்லை. மாறாக, எதிரி சம்பவ சமயத்தில், சம்பவ இடத்தில் இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். எனவே, எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை மெய்ப்பிக்கும் வகையில் சாட்சியம் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தவில்லை என்பது தெளிவாகிறது.

22) புகார்தாரரான அ.சா.1 மற்றும் இதர அரசு தரப்பு சாட்சிகளும் அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலும் முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதால், அ.சா.7–ன் சாட்சியத்தினை மட்டும் அடிப்படையாக கொண்டு அரசு தரப்பு வழக்கினை

நிரூபித்துவிட்டதாக எதிரிக்கு எதிராக முடிவு செய்வது நீதியின் நலனுக்கு உகந்ததாக அமையாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், அரசு தரப்பில் சம்பவ வீடியோ அடங்கிய CD அ.சா.பொ. 1 ஆகவும், போட்டோ அ.சா.பொ. 2 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எனினும் மேற்படி சான்று பொருட்களுடன் இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 65B(4) சான்றிதழ் இணைக்கப்படாத காரணத்தால் மேற்படி சான்று பொருட்கள் ஏற்கதக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே, எதிரியின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டிற்கு அரசு தரப்பில் உறுதியூட்டும் வகையில் எவ்வித சாட்சியமும் அரசு தரப்பில் இல்லாத நிலையில் தனித்து இயங்குகிற உறுதியூட்டம் இல்லாத காவல்துறை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் கொண்டு எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுவிட்டதாக தீர்மானிக்க இயலாது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

23) இவ்வழக்கின் புகார்தாரர் அ.சா.1 எதிரியுடன் சமாதானமாக செல்வதாக இந்நீதிமன்றத்தில் BNSS பிரிவு 359(ii)–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சமாதானம் செய்துக்கொள்ள முடியாத குற்றப்பிரிவினை சமாதானம் செய்வதற்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதால் மேற்படி மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், அ.சா.1 எதிரியுடன் சமாதானமாக செல்வதால் இவ்வழக்கினை மேல் நடத்துவதால் அரசு தரப்பிற்கு யாதொரு பலனும் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

24) எனவே, மேற்படி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை ஆராய்ந்து பார்க்கும்போது இவ்வழக்கின் சம்பவத்தை பற்றி சாட்சிகள் யாரும் அரசு தரப்புக்கு ஆதரவாக சாட்சியமளிக்காத நிலையில் சம்பவ சமயத்தில் எதிரிதான் அ.சா.1 ஐ திட்டி, அடித்து, கொலை மிரட்டல் விடுத்தார் என்ற குற்றச்சாட்டானது அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி தெளிவாக நிரூபிக்கவில்லை என்பதால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளிக்கப்படவேண்டும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

25) இறுதியாக, எதிரி மீது சட்டப்பிரிவுகள் 294(b), 352, 506(2) இதசவின் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களில் எதிரி குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து எதிரி BNSS பிரிவு 271(1)—ன் கீழ் விடுதலை செய்து இந்த நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

26) எதிரியால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிணைப்பத்திரத்தினை ரத்து செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

27) அரசு தரப்பில் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்று பொருட்களான அ.சா.பொ.1 குறுந்தகடு மற்றும் அ.சா.பொ.2 புகைப்படம் ஆகியவை மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைகள் நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026 ஆம் ஆண்டு மார்ச் 07 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RAJESHKANNA M

Digitally signed by RAJESHKANNA M
Date: 2026.03.07 17:08:01 +0530

நீதித்துறை நடுவர் எண்.2
மயிலாடுதுறை.

**<u>அட்டவணை :—</u>**
**<u>அரசு தரப்பு சாட்சிகள் :—</u>**

அ.சா.1 — திரு. சஞ்சய்குமார்மீனா (புகார்தாரர்)

அ.சா.2 — திரு. ராஜேந்திரன் (செவிவழி சாட்சி)

அ.சா.3 — திருமதி. ஆரோக்கியமேரி (கண்ணுற்ற சாட்சி)

அ.சா.4 — திரு. ராகிராஜ் (பார்வை மகசர், கைப்பற்றுதல் மகசர் சாட்சி)

அ.சா.5 – திரு. மணிமாறன் (பார்வை மகசர், கைப்பற்றுதல் மகசர் சாட்சி)

அ.சா.6 – திரு. மணீஷ்குமார்மிஸ்ரா (செவிவழி சாட்சி)

அ.சா.7 – திருமதி. மனோண்மணி (காவல் உதவி ஆய்வாளர்–புலன் விசாரணை அதிகாரி)

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள் :–</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 08.10.2023 | புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1 –ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | 08.10.2023 | கைப்பற்றுதல் மகசரில் உள்ள அ.சா.4–ன் முதலாவது கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | 08.10.2023 | பார்வை மகசரில் உள்ள அ.சா.4–ன் முதலாவது கையொப்பம் |
| அ.சா.ஆ.4 | 08.10.2023 | கைப்பற்றுதல் மகசரில் உள்ள அ.சா.5–ன் இரண்டாவது கையொப்பம் |
| அ.சா.ஆ.5 | 08.10.2023 | பார்வை மகசரில் உள்ள அ.சா.5–ன் இரண்டாவது கையொப்பம் |
| அ.சா.ஆ.6 | 08.10.2023 | புகார்மனு |
| அ.சா.ஆ.7 | 08.10.2023 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.8 | 08.10.2023 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.9 | 08.10.2023 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.10 | 08.10.2023 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.11 | 08.10.2023 | படிவம் 91 |

**<u>அரசு தரப்பு சான்று பொருள் :–</u>**

1. அ.சா.பொ. 1 – வழக்கு சம்பவ வீடியோ பதிவு அடங்கிய குறுந்தகடு

2. அ.சா.பொ. 2 – புகைப்படம்

**<u>எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்று பொருட்கள் :–</u>** **– இல்லை –**

**<u>குறிப்பு :–</u>**

1. எதிரி விசாரணையின்போது பிணையில் இருந்து வந்தார்.

2. சாட்சிகள் விசாரணையின் போது 3 முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3. வழக்கின் முடிவு காவல் துறைக்கு அறிவிக்கப்பட்டது.

RAJESHKANNA M

Digitally signed by RAJESHKANNA M
Date: 2026.03.07 17:08:10 +0530

நீதித்துறை நடுவர் எண்.2
மயிலாடுதுறை.